மாயவர்.'பெரியவீட்டுக்கவுண்டா! நீ துட்டத்தை கையில் எடுத்து வா' என்று மாயவர் ~~மாயவர்~~ ஜலமிலே பார்த்தமாக நின்று, பாச்சான் கோலை மூன்று பேர் கையில் பிடித்து, தண்ணீர், பால், விட்டு பூஜை செய்து நவதானியத்தை எடுத்து தூபம் காட்டி பாச்சான் கோவில் கட்டினார்கள். பின், கோலை பூமியில் நட்டு, பெரியவீட்டுக் கவுண்டர் தேங்காயை உடைத்து வைத்து, நெருப்பில் நெய் போட்டு, தண்ணீர் சுற்றி போட்டு பூஜை செய்தார்.

மாயவர்.'தாமரை! அஸ்திவாரம் போட்டாகிவிட்டது, இனி கொத்தர்களை கூப்பிட்டு, கல் உடைத்து, வீட்டு வேலையை ஆரம்பம் செய்யுங்கள், என்னவேண்டும் போனது நினை நான் வருகிறேன்' என்று மாயவர் புறப்பட்டு பால்கடல் சென்றார். அணியம்பூர் கவுண்டர்களும், விடை பெற்று ஊருக்கு சென்றார்கள்.

பாட்டு,,

"இந்தப்பிரகாரம் நடக்குது அந்நேரம்
அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குதுமார்.
நாளொரு நாள் பொழுதொரு நாள்
அங்கு நடக்குதுமார் நல்பருவம்"

தாமரை.'அடே தங்கவேலி! நீ தங்கவளநாடு போய், ஆயிரம் வீட்டு கொத்தர்களையும், கூட்டிக்கொண்டு வா.' தங்கவேலி சரி நல்லது என்று தங்கவளநாடு புறப்பட்டான்.

பாட்டு,,

"பொன்னிவளநாடு விட்டு நாடுவிட்டு
தங்கவளநாடு வாறான் நாடு வாறான்
வேகாத வெய்யிலிலே அங்கு வெய்யிலிலே.
வெந்தெரிந்த கானலிலே வாறானே தங்கவேலி"

தலையேறி தூங்குவள நாடு வந்து, கொத்தர்களை கூப்பிட்டு, 'அம்மா! பொன்னிவள நாடு பெரியவீட்டு எஜமானர், உங்கள் ஆயிரம் வீட்டுக்காரரையும் உடனே கூட்டி வரச் சொன்னார்' என்னுர், கொத்தர்கள் 'இதோ! வருகிறோம்' என்று சாமானங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

பாட்டு,

"தூங்குவள என்னூத்து நாடு விட்டு
பொன்னிவள என்சாமி நாடு வாறார்
ஓட்டம் ஓட்டம் பெரும் நடையா
ஒரு விரைவாய் கொத்தர்கள் வருகிறார்"

கொத்தர்கள் பொன்னிவள நாடு வந்து, குன்னுடையாக்கவுண்டரை பார்த்து நமஸ்காரம் செய்தார்கள்.

கு.சாமி. 'கொத்தர்களே! மங்களம், உண்டாகட்டும்! ஆயிரம் பேரும் வந்து விட்டீர்களா?

கொத்தர். 'சாமி! அப்படியே, வந்திருக்கிறோம்.'

கு.சாமி. சரி நல்லது, நாம், அரண்மனை கட்ட வேண்டும் மூன்று மாதத்துக்குள் கட்டி முடிக்க வேண்டும்.

கொத். 'சாமி! நல்லது.'

கு.சாமி. 'தாமரை! தட்டத்தில் ஒரு வெள்ள முத்து அளந்து போட்டு, வெற்றிலை பாக்கு வைத்துக் கொடு.'

தாமரை. 'நாதா! கொடுத்து விட்டேன்.'

கு.சாமி. 'சரி, கொத்தர்களே! சீக்கிரம், கல்லு உடைத்து வேலையை ஆரம்பம் செய்யுங்கள்.'

ஆயிரம் கொத்தர்களும் சென்று, கல் உடைக்க ஆரம்பித்தார்கள்.

பாட்டு

"அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்.
ஆயிரம் கல் உடைத்து அஸ்திவாரம் கட்டுனாரோ
அந்தப்பிராகாரம் இனி
நடக்குது பார் நல்பருவம்.
மாயன் பெருமாளும் இனி
மகமேரும் கோபாலன்
அகலிகை சாபந்தீர்த்த அந்த
ஹரிராமர் வந்து நின்றார்"

மாயவர் வந்து நின்று, ஆயிரம் கொத்தர்களும் ஆயிரம் கல் எடுத்து வைத்தால், மாயவர் ஒருவருக்கும் தெரியாமல், அந்தரத்தில் ஆயிரம் கல் எடுத்து வைத்தார். இப்படி மூன்று மாதம் ஆவதற்குள், அஸ்டகிரி, தெர்மகிரி, மகா மண்டபம், மணிமண்டபம், வேணி பட்டக சாலை, ஏடு வாசிக்கும் எழுத்து வர்ண சாவடி,
படிப்பு வாசிக்கும் மண்ணூங்கி சாவடி,
பகடை விளையாடும் பளிங்கு மண்டபம்,
பொன் ஊருக்கி மாளிகை,
கச்சு கட்டும் மாளிகை,
திரவியம் போடும் கஜான்,
வெந்நீர் மண்டபம்,
சமையல் அறை.

ஆயுத சாலை இப்படி அலங்கார மண்டபங்களுடன் அரண்மனை கட்டி முடித்தார்கள். வேலை சரியாக முடிந்ததும், கொத்தர்கள் குன்னுடையா சாமியிடம் வந்து, 'சாமி! நாங்கள் போய் வருகிறோம்.'

கு.சாமி: 'சரி, நல்லது! தாமரை! இன்னும், ஒரு வள்ள முத்து அளந்து கொத்தர்களுக்கு கொடு.' கொத்தர்கள் முத்தை வாங்கிக்கொண்டு, 'சாமி! நாங்கள் போய்வருகிறோம்,' என்று விடை பெற்று தங்கள் வளநாடு போய் சேர்ந்தார்கள். கொத்தர்கள் சென்றபின் தாமரை, 'நாதா! இனி மாயவரை வர

வழைத்து, வீடு புண்ணியாச்சனை எப்போது செய்யலாமென்று கேட்கலாம்.

கு.சாமி. 'பெண்ணே! அப்படியே, செய்.'

தாமரை. 'பரந்தாமா! பூபாலகா! நான் அரண்மனை கட்டி முடித்து விட்டேன், தாங்கள் உடனே வந்து சேரவேண்டும், காருண்ய நாதா!' என்று மாயவரை வேண்டினாள்.

தாமரை அழைப்பதை மாயவர் பார்த்து உடனே கருடவாகன மேறி புறப்பட்டார்.

பாட்டு.

"கருடன் மேல் சீனி வைத்து சீனி வைத்து
பூலோகம் வருகிறாரே மாயவரும்
பொன்னிவள நாடுதேடி நாடுதேடி
வருகிறாரே பரந்தாமன்"

பொன்னிவள நாடு வந்து, குன்னுடையா சாமி அரண்மனைக்கு சென்றார். மாயவருக்கு, கவுண்டரும் தாமரையும் நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர். 'மங்களம், உண்டாகட்டும்! தாமரை! அரண்மனை வேலை சரியாக முடிந்ததா? என்ன எதற்கு வர வழைத்தாய்?'

தாமரை. 'சுவாமி! அரண்மனை வேலை, பாக்கியில்லாமல் சரியாக முடிந்து விட்டது, புண்ணியார்ச்சனை எப்போது செய்யலாமென்று கேட்கத்தான் அழைத்தேன், தாங்கள் நல்ல நாள் பார்த்து, புண்ணியார்ச்சனை நடத்திக் கொடுக்கவேண்டும், சுவாமி!'

மாயவர். 'தாமரை! இந்தமாதம், 15ந்தேதி நல்லநாள் திங்கள் கிழமை இவன் பிறந்த நாளில், காலை ஒன்பது நாழிகைக்குமேல் பத்து நாழிகைக்கு, நல்லநேரம் உள்ளது அப்போது செய்து விடலாம், சோழதேச அரசருக்கும், மற்றும் குடிபடைகளுக்கும், கிராமத்து கவுண்டர்களுக்கும் அறிக்கை யிடுங்கள்.'

தாமரை. 'சுவாமி! நல்லது, தாங்கள் வந்து புண்ணியாச்சனையை சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டும்.'

மாயவர்: நல்லது, தாமரை! வீடு புண்ணியர்ச்சுனை அன்றுதான் உங்களுக்கு பட்டம் வைத்து மகுடாபிஷேகம் செய்துவிடலாமென்று நினைத்துள்ளேன்.

தாமரை: சுவாமி! நல்லது.

மாயவர்: ஸ்ரீ, நான் போய் வருகிறேன் என்று புறப்பட்டு பால் கடல் சென்றார்.

பாட்டு

"இந்தப் பிரகாரம் இனி நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குதுபார்
நாளொரு நாள் பொழுதொரு நாள் இனி
நடக்குதுபார் நல்பருவம்"

தாமரை: அடே, கருப்புக்குதுலயேளி! இங்கு வா. சோழதேசம் சென்று, அரசரிடம், பொன்னிவள நாட்டில் நாம் அரண்மனை கட்டி புண்ணியார்ச்சுனை செய்வதாகவும், இந்தமாதம், 16ம் நாள் திங்கள் கிழமை காலை ஒன்பது நாழிகைக்குள் தங்களை வந்து சேரும்படி சொன்னார்கள், என்று சொல்லிவிட்டு வா.

துலயேளி: நல்லது என்று சோழதேசம் புறப்பட்டான்.

பாட்டு

"பொன்னிவள நாடு விட்டு நாடு விட்டு
சோழதேசம் வருகிறானே துலயேளி
ஓட்டம் பெருநடையா பெருநடையா
ஒருவிரைவாய் வருகிறானே வருகிறானே
சோழதேசம் தேடியல்லோ தேடியல்லோ
வருகிறானே துலயேளி"

துலயேளி சோழதேசம் வந்து, அரசனை கண்டு அட்டம் பணிந்து ஆராதனை செய்தான், பாதம் பணிந்து பணிவிடைகள் செய்தான்,

அரசன்: துலயேளி! மங்களம், உண்டாகட்டும்! என்ன விஷயமாய் வந்தாய்?

துலயேளி: அரசே! பொன்னிவள நாட்டில், குன்றுடையாக் கவுண்டர் புது அரண்மனை கட்டியிருக்கிறார்,

இந்த மாதம், 15ம் நாள், திங்கள் கிழமை காலை 9 மணிக்கு புண்ணியார்ச்சனை செய்கிறார்கள், தங்களையும் குடிபடைகளையும் வந்து சேரும்படி சொல்லிவரச் சொன்னார்கள்.'

அரசர்: 'சரி, நல்லது தலையாரி! ஆயிரம் கிராமத்துக்கும் அழைப்பு விட்டிருக்கிறதா?'

தலையாரி: 'சாமி! கிராமத்துக் கவுண்டர்களுக்கும் அழைப்பு விட்டிருக்கிறது.'

அரசர்: 'சரி, நல்லது! என்று அரசர் மேவரும் கலந்து யோசித்து, குன்னுடையாக் கவுண்டனுக்கு அரண்மனை புண்ணியார்ச்சனை அன்றே மகுடாபிஷேகம் செய்து, பட்டம் கொடுத்து விடலாமென்று முடிவு செய்து, அடே தலையாரி! இப்படியே, தங்கவள நாடு சென்று, பங்காளிக் கவுண்டர்கள் ஆயிரம் பேர்களையும் 15ம் நாள் திங்கள் கிழமை காலை பொன்னிவள நாடு வந்து சேரும்படி நான் சொன்னதாக சொல்லி விட்டு, அப்படியே, அணியப்பூர் சென்று பிராமணர்களையும், வரச் சொல்லி விட்டுப் போ.'

(தலையாரி 'சாமி! நல்லது,' என்று புறப்பட்டான்.

பாட்டு,,

"சோழ தேசம் விட்டல்லவோ விட்டல்லவோ.
தங்கவளநாடு வாறானே நாடு வாறானே
ஓட்டம் பெரும் நடையா பெரு நடையா.
ஒருவினை வாய் வருகிறானே தலையாரி."

தலையாரி தங்கவளநாடு வந்து, கவுண்டர்களை பார்த்து 15ம் நாள் காலை அரசர் உங்களை பொன்னிவள நாடு வந்து சேரச் சொன்னார், என்று சொல்லி விட்டு, அணியப்பூர் சென்று பெரியவீட்டு கவுண்டனை பார்த்துச் சொல்லி விட்டு, பிராமணருக்கும் மேளவாத்தியத்திற்கும் சொல்லி விட்டு, தலையாரி பொன்னிவள நாடு வந்து சேர்ந்தான். குன்னுடையாக் கவுண்டனைப் பார்த்து, 'சாமி! எல்லோருக்கும் சொல்லி வந்து விட்டேன்.'

கு.சாமி: 'சரி, நல்லது!'

பாட்டு,,

"அந்தப் பிரகாரம் இனி
நடக்குது பார்த்திகாரம்
அப்படியே நல்லதென்று
இனி அன்புடனே நடக்குதுபார்"

15-ம் தேதி திங்கள் கிழமை, இவன் பிறந்தநாள் வெள்ளி உதிக்குமுன், வெண்கோழி கூவுமுன் சந்திரன் தேவி சூரியன் கிழம்புமுன்னே, குன்றுடையா சாமி செல்லாத்தா கோவிலுக்கு சென்று, அருபூஜை, குருபூஜை, 58 லிங்க பூஜையும் சரியாக முடித்து, அரண்மனை வந்து சேர்ந்தார். சிறிது நேரத்தில், அணியனூர் கவுண்டர்களும், பிராமணர்களும் வந்தார்கள். மற்றும், சோழதேச அரசர்களும், குடிபடைகளும் வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் வந்து, அரண்மனையில் இருக்கும்போது. சிறிது, நேரத்தில் மாயவர் வந்து சேர்ந்தார். அரசரும், மற்றும் குடிபடைகளும், மாயவரை நமஸ்காரம் செய்தார்கள்.

மாயவர்: 'எல்லோருக்கும், மங்களம், உண்டாகட்டும்! தாமரை! பிராமணர்களிடம், புண்ணியாசனக்கு தேவையான சாமான்களை கொடுத்து, புண்ணியாசனை ஆரம்பம் செய்யச் சொல்.'

தாமரை: 'சுவாமி, நல்லது!' பிராமணர்கள், தேவையான சாமான்களை வாங்கி, வீட்டுக்கு மாவிலை தோரணம் கட்டி, புண்ணியாசனையை எல்லோர் முன்னிலையிலும், விழாவை சிறப்பாக நடத்தினார்கள். பின், அரசர், மாயவனை பார்த்து 'சுவாமி, இதே நாளில், குன்றுடையாக்கவுண்டனுக்கு மகுடாபிஷேகம் செய்து, பட்டம் வைத்து விடலாம்.'

மாயவர்: அரசர்களே! நல்லது, அப்படியே செய்து விடலாம் என்று, கனக சபையில் எல்லோரையும் உட்கார வைத்து, குன்னுடையாக் கவுண்டரையும், தாமரைக் கவுண்டிச்சியையும் ஆசனம் போட்டு அமரச் செய்து, அவர்கள் முன் தங்க பீடம் அமைத்து, அதன் மேல் தங்க கிரீடம் வைத்து, இருவருக்கும் தங்க மிஞ்சி போட்டு, 18 வாத்தியங்கள் முழங்க, 18 அபிஷேகம் செய்து, கங்கை தீர்த்தம் விட்டு பூஜை முடித்தார்கள். அதன் பின், மாயவர், அரசர்களை நோக்கி 'அரசர்களே! குன்னுடையாக் கவுண்டருக்கு, 18 விருதுகளையும் கொடுங்கள்.'

அரசர்: 'சுவாமி! நல்லது என்று, பொன் ஊஞ்சல், தங்கத் திஞல், பூந்தேர், அம்புபரிவட்டம் ஆகிய விருதுகளை கொடுத்தார்கள். பின், குன்னுடையாக் கவுண்டனும், தாமரைக் கவுண்டிச்சியும் எழுந்து, எல்லோரையும் வணங்கினார்கள்.

மாயவர்: 'அப்பா, குன்னுடையா கவுண்டா!
வாழ்வா வளர்ந்திருப்பாய்!
மண்டபத்தில் வெற்றிருப்பாய்!
இன்னும் பதம் பெருவாய்! பீஷ்மனைபோல் இருப்பாய்!
பின்னும் பதம் பெருவாய் பெருமாளைப்போல் இருப்பாய்!' என்று மனதார வாழ்த்தினார்.
கிராமத்து கவுண்டர்களும், குன்னுடையா கவுண்டனை, காணிக்கை வைத்து காண்பார் சிலகோடி,

மாணிக்கம் வைத்து வருந்துவார் சிலகோடி. எல்லாம் முடிந்தபிறகு, எல்லோருக்கும் விருந்து பசாரம் நடந்தது, தாம்பூலம் வழங்கினார்கள். அப்படி இருக்கும்போது, தங்கவளநாட்டு பங்காளி கவுண்டர்கள் வந்து, பிள்ளையார் கோவிலில் இருப்பதாக செய்தி வந்தது.

அரசர். 'அடே, சேவகா! தங்கவளநாட்டு கவுண்டர்கள், பிள்ளையார் கோவிலில் இருக்கிறார்களாம், போய் கூட்டி வாருங்கள்.'

சேவக. 'சாமி! நல்லது' என்று, பிள்ளையார் கோவிலுக்கு சென்று தகவல் கொடுத்தவுடன், அனைவரும் கவுண்டர்களும் வந்து, அரசரைக் கண்டு நமஸ்க்காரம் செய்தார்கள்.

அரசர். 'அப்பா, கவுண்டர்களே! குன்னுடையா கவுண்டனுக்கு சேரவேண்டிய பூமிகளையும், நாட்டையும் இன்றுடன் அவருக்கு விட்டு விடுங்கள்.'

பங்காளி. 'அரசே! நல்லது, நாங்கள் போய் வருகிறோம்' என்று, புறப்பட்டுச் சென்றார்கள்.

மாயவரும், எல்லோரிடமும் விடைபெற்று பால்கடல் சென்றார். எல்லோரும் சென்ற பின், அரசர் குன்னுடையா கவுண்டனை பார்த்து, 'உனக்கு பேரூர் பட்டம், பெரியபட்டம் வைத்திருக்கிறேன்; ஆயிரம் கிராமத்திற்கும், 56 தேசத்திற்கும் கெட்ட குடும்பம், ஆகிந்த குடும்பம், தண்ணீர் தெளிக்கப்படும் மாதா உன்னை வாதாவைத்திருக்கிறேன்; மனுநூல் பிரகாரம் தவறாமல் செங்கோல் நடத்தி வரவேண்டும்; ஒருவரை அடிக்காமல், ஒருவருக்கு அநியாயம் செய்யாமல்,

குடிபடைகளை அன்புடன் நடத்தி, ஆட்சி செய்து வரவேண்டும்" என்று சொல்லிவிட்டு அரசர்கள் எல்லோரும் 'நாங்களும் போய் வருகிறோம்' என்று விடைபெற்று சோழதேசம் சென்றார். கிராமத்து கவுண்டர்களும், விடைபெற்று அவர்கள் ஊருக்கு சென்றார்கள்.

பாட்டு:

"செங்கோலும் அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்திப்பட்டம் ராஜன்.
ஆளுகிறார் அங்கே ஆளுகிறார்.
தாங்கவில்லை அதிகாரம் இனி அதிகாரம்
தரித்துப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் இனி ஆளுகிறார்.
காலம் நல்லோ என்னம்மா
பனிப்பெயும் அங்கு பனிப்பெயும்
குருகு சம்பா நாட்டிலே
நெல்விளையும் அங்கே நெல்விளையும்
மீரு நல்லோ பொன்னய்யா
பனிப்பெயும் அங்கு பனிப்பெயும்
மிளகு சம்பா நாட்டிலே
நெல்விளையும் அங்கு நெல்விளையும்"

வசனம்:

'கட்டு கலங்காணும் கருதுளிர்க்க நெல் காணும்! குன்னுடையா ராஜா, செல்லாத்தாளுக்கு ஒன்று காலநாளையும் சரியாக நடத்தி வந்தார். குன்னுடையா ராஜுக்கு பட்டம் வைத்து சில நாள் கழிந்த பிறகு. ஒருநாள் தாமரை 'நாதா! நாம் என்ன பாவம் செய்தோம், நமக்கு ஏன் குழந்தையில்லை? நம் வீடு இன்று கட்டியது போல் குழந்தை இல்லாமல், கலையிழந்து கிடக்கிறதே சாமி!

பாட்டு,,

"கன்னி நல்லோ என்னம்மா அழுகுறாளே
அனி அழுகுறாளே
அனி காந்தேரி என்னம்மா
வாடுறாளே. அனி வாடுறாளே
நான் மைந்தனில்லா ராஜாவே.
பாவியின்னு அங்கு பாவியின்னு
வையகமும் நாட்டிலே
போறேனேன் அங்கு போறேனேன்.
குழந்தையில்லா ராஜாவே.
பாவியின்னு அனி பாவியின்னு.
கொல்லிடமும் நாட்டிலே.
போறேனேன் அங்கு போறேனேன்"

வசனம்.

'நாதா! பல்லு படைத்த ஜனம் பாதி ஜனம் பேசுதுங்கோ,
சீமை படைத்த ஜனம், சிலஜனம் பேசுதுங்கோ,
ஊரு படைத்த ஜனம் ஊர ஜனம் பேசுதுங்கோ,
கன்னி அழுகுறாள் காந்தேரி சோகிக்கிறாள்.'

கு.ராஜன். 'வாண்டாமம்மா தாமரை! வார்த்தை சொல்லுகேளு
மம்மா, அன்று எழுதும் கர்த்தன் அழித்து
எழுதப்போவதில்லை.
ஈசன் எழுத்திலே அனி எள்ளளவும் தப்பாது,
கரியைத் துடைக்கலாம், காவேரியை நீந்தலாம்,
விதியை துடைக்க பிர்மனால் ஆகாதம்மா.

தாமரை. 'நாதா! நாம், யாருக்கு அநியாயம் செய்தோம்?
யாருக்கு துரோகம் செய்தோம்? என்ன
பாவம் செய்தோம்? கடவுள் நம்மளுக்கு
ஏன், குழந்தை இல்லாமல் செய்து விட்டார்?'

கு.ராஜ. 'அழுக வேண்டாம், பெண்ணே! நாம் என்ன
செய்வது, கடவுள் நம்மளுக்கு அப்படி
செய்து விட்டார்.

பாட்டு,,

"தங்கம்போல் தாமரை கண்ணீரை
தரணியிலே தரணியில் வடித்ததேதாள்
முத்துப்போல் பத்தினி கண்ணீரை
முகத்தோடு தாமரை வடித்ததேதாள்
பவளம்போல் பத்தினி கண்ணீரை
பக்கமெல்லாம் பூமியிலே வடித்ததேதாள்
அனி வடித்ததேதாள்"

வசனம்,

'கன்னி ஆடுகிறாள் காந்தேரி சோருகிறாள்
மங்கை அழுகிறாள் மலர் கிளியா வாடுகிறாள்)

தாமரை பாட்டு,,

"சாணி நல்லோ என்சாமி புழு புழுத்தா.
சமுத்திரமே என்சாமி.
மீன் புழுக்கும் அங்கே மீன் புழுக்கும்
எந்தன் கும்பி நல்லோ என்சாமி
புழு புழுத்தா அங்கே புழு புழுத்தா.
கொல்லிடமும் ராஜாவே.
மீன் புழுக்கும் அங்கே மீன் புழுக்கும்"

வசனம்.

'நான் உனக்கு மரமானேன் உள்ளுரும் செக்கானேன்)
'பருத்து மரமானேன் பாழும் செக்கானேன்)

பாட்டு,,

"நான் பெண்ணு நல்லோ சாமி
பிறக்கயிலே அங்கு பிறக்கயிலே
நான் மண்ணாக பூமியிலே
பிறக்கலையே சாமி பிறக்கலையே
மண்ணாக நாதா பிறந்துமங்கே.
நான் செடியாக பூமியிலே முளைக்கலையே"

கு.ராஜன். 'வாண்டாமம்மா, தாமரை! வார்த்தை சொல்லக் கேளுமம்மா,
எதுதான் இறைக்கு, அதுதான் விதியுமா
அருங்கிளியே விளர்மாது,
பெண்ணே! நம்மளுக்கு 45 வருஷமாக குழந்
தையில்லையே, பங்காளி வீட்டில் ஒரு குழந்
தையை எடுத்து வந்து, வளர்க்கலாம்
அதுகாகே.'

தாமரை. 'நாதா! என்ன பேசுகிறீர்கள்?'

பாட்டு.

"பத்து பிள்ளை என் சாமி இருந்தாலும்
பங்காளி பிள்ளை ஆகாதுங்கோ
ராஜா ஆகாதுங்கோ.
எட்டுப்பிள்ளை இருந்தாலும்
அனத்தாளி பிள்ளை ஆகாதுங்கோ
நாதா ஆகாதுங்கோ.
மச்சன் பிள்ளை கொல்லிவைத்தால்
நாதா கொல்லிவைத்தால்
எந்தன் மயிரு கருகாது.
ராஜா கருகாது.
கொழுந்தன் பிள்ளை கொல்லி வைத்தால்
ராஜாவே கொல்லி வைத்தால்
எந்தன் கொண்டை நல்லோ.
கொண்டை கருகாதுங்கோ!!

வசனம்.

'நாதா! பத்து பிள்ளை இருந்தாலும், ராஜா
பங்காளி பிள்ளை ஆகாதுங்கோ.'
(கன்னி அழுகின்றாள் அனி காங்கேரி
தேறுகின்றாள்,

கு.ராஜ.(வாண்டாமம்மா, தாமரை! வார்த்தை
சொல்கிறேன் கேளுமம்மா.

~~[illegible]~~ பெண்ணே! நாம் இருக்கும் வரை, நன்றாக வாழ்ந்து, மிகு திரவியம் இருந்தால், பங்காளி பிள்ளைகள் சாப்பிடட்டும்.

தாமரை: (நாதா! என் வயிற்றில் நெருப்பை மூட்டுகிறீரே! நம்மளுக்கு குழந்தை இல்லாவிட்டாலும், கிராமத்து குடிபடைகளுக்குத்தான் நம் சொத்துக்கள் சேரவேண்டும், நாதா! பங்காளிகள் நாம் பிழைத்துக் கொள்வோம் என்று, கெட்ட புத்தியுடன் வருத்த சொல்லத்தை கொடுத்தார்கள், அதை மறந்து, சொத்து நமக்குப் பின் அவர்களுக்கு சேரட்டும் என்கிறீர்களே! உங்களுக்கு ரோஷமில்லையா? என்று (கண்ணீர் அருகினாள் காந்தேரி சொருகிறாள்) நாதா! நம்மளுக்கு குழந்தை இல்லாவிட்டாலும் போகிறது, நம்மிடம் அண்டி பிழைக்கும், எந்த பிராணிகளுக்கும் குழந்தை இல்லையே; சாமி! இது என்ன காரணம்?)

பாட்டு:

"காடுசுத்தி மேய்ந்து வரும்
காரிமாடு ராஜாவே தான் வரடு.
வெளிசுத்தி மேய்ந்து வரும்
அங்கு மேய்ந்து வரும்
வெள்ளாடு தான் வரடு.
மேட்டிலே வாழுமந்த அங்கே வாழுமந்த
மூஞ்சி எலி ராஜாவே தான் வரடு
விட்டஞ்சட்டம் ஓடி வரும்
அங்கு ஓடி வரும்
சட்டைப்பூனை ராஜாவே [illegible]

முன்பக்க பாட்டு

"திருகிணற்றில் உள்வாங்கும் அங்கு உள்வாங்கும்
திட்டுக்குருவி ராஜாவே தான் வாரு
வாசலிலே வாங்குமங்கு அங்கு வாங்குமங்கோ
ஸ்ரீ நாய் ராஜாவே தான் வாரு"

வசனம்

'நாதா! அதுக்கும் குறை செய்தேன் அந்த உனக்கும் தீமை செய்தேன்'. (மங்கை அழுகிறாள் மலர்க்கிளியாள் வாங்கிறாள்) நாதா! சேவகனை அனுப்பி, தங்க வளநாட்டில் இரண்டு மாட்டுக்கன்று வாங்கி வந்து வளர்த்து பார்க்கலாம் என்று, சேவகனை கூப்பிட்டு 100.... ரூபாய் கொடுத்து, தங்கவள நாடு சென்று, இரண்டு கன்று ஒன்று கிடா, ஒன்று கிடாரி, இரண்டும் வாங்கி வா' என்றாள்.

சேவகன்: 'சாமி! நல்லது' என்று, புறப்பட்டான்.

பாட்டு

"அப்படியே என் சாமி நல்லதென்று
அன்புடனே என் சாமி வருகிறேனே.
வண்டோட்டம் என் சாமி வேகவிரைவாய்
வாறேனே என் சாமி சேவகனும்"

சேவகன் தங்க வளநாடு வந்து, கொத்தர் தெருவுக்கு சென்று கொத்தர்களை கூப்பிட்டு, 'அம்மா, கொத்தர்களே! பொன்னி வளநாட்டு பெரிய வீட்டு அத்தர, மாட்டுக்கன்று இரண்டு வேணுமென்று, பணம், 100 ரூபாய் கொடுத்து விட்டார்கள்,

~~[illegible]~~ அதை உன்னிடம் கொடுக்கிறேன், நீ போய்
காது சிறியது, கண் பெரியதாக, வால் சிறியது,
நல்ல ஜாதி மயிலைக் கன்று, காளை யென்று, கிடாரி
யென்று, இரண்டும், நல்ல அழகான கன்று
களாக சீக்கிரம் வாங்கிவாருங்கள்.'

கொத்தர் 'சரி, நல்லது!' என்று போய் சிறிது நேரத்தில்
இரண்டு மயிலைக் கன்று வாங்கிவந்தார்கள்.
சேவகர் கன்றுகளை பிடித்துக் கொண்டு கொத்
தர்களிடம் விடை பெற்று புறப்பட்டு ~~[illegible]~~
பொன்னிவள நாடு வந்து, இரண்டு கன்
றுகளையும் அரண்மனை முன் கட்டிவிட்
டு, உள்ளே சென்று, தாமரையைக் கண்டு
நமஸ்காரம் செய்து 'சாமி! கன்றுகள்
வாங்கி வந்து விட்டோம், முன்வா
சலில் கட்டியிருக்கிறோம்' என்றார்கள்.
தாமரை கன்றுகளை போய் பார்த்து சந்தோ
சப்பட்டு 'அய்யா, சேவகரே! நல்ல கன்று
களாகவே, வாங்கி வந்து விட்டீர்கள், சரி
இதை கொண்டு போய், வண்டோங் குளத்
தில் மாடு மேய்க்கும் மக்சக்கோர் சின்னான்
இருப்பான், அவனிடம் கொண்டு போய்
விட்டு வாருங்கள்.'

சேவகர் 'சாமி! நல்லது!' என்று, கன்றுகளை பிடித்து
கொண்டு போய் விட்டு வந்தார்கள்.

பாட்டு,,

"இந்தப் பிரகாஷம் நாட்டிலே
நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று
அன்புடனே நடக்குதுமார்."

கன்றுகள் வாங்கிவிட்டு ஒரு வருஷம் சரியாக முடிந்தது, இரண்டு கன்றும் பெரியமாடு ஆகி, கொழு கொழுவென்று நின்றது. ஆனால், காளையும் கிடாரியும் சேருவதில்லை, கன்றும் போடுவதில்லை.

தாமரை. 'நாதா! நான் தான், வரடி யென்றால், நான் வாங்கி வளர்த்த கன்றுகளும், வரடி ஆகிவிட்டது.'

பாட்டு,,

"பிச்சைக்கு வந்தவரை நாதா
பின்னே வர ஒரு நாளும் சொன்னதில்லை
அன்னத்துக்கு ராஜாவே வந்தவரை
அடுத்து வர ஒரு நாளும் சொன்னதில்லை"

வசுமை.
'நாதா! நான் அதுக்கும் குறைகள் செய்தேன், அத்தினக்கும் கிழமை செய்தேன், நாதா! இன்னும் ஒரு யோசனை எனக்கு தோன்றுகிறது, இரண்டு நீலா குதிரைக் குட்டிகள் வாங்கி வந்து விடலாம், அதாவது குட்டி போடுமா பார்க்கலாம்' என்றாள்.

கு. சாம். 'நல்லது, பெண்ணே! உன் இஷ்டம் போல் செய்.'

தாமரை. 'அடே, பாரிவில்லு சேவகா! இங்கு வா, பணம், 200. ரூபாய் தருகிறேன் சோழதேசம் சென்று, அரசரிடம் இரண்டு நிலா குதிரைக்குட்டி வாங்கி வாருங்கள்.'

சேவகர் 'சரி, நல்லது! போய் வருகிறோம்!' என்று, புறப்பட்டார்கள்.

பாட்டு,

"பாரிவில்லு என்னைத்த சேவகனும்
வெள்ளி வெடி என்சாமி அருகனும்
பொன்னிவள என்னத்தா நாடு விட்டு
வாரானே என்சாமி சேவகனும்
வேகாத என்னத்தா வெய்யலிலே.
வெந்தெரிஞ்ச என்சாமி கானலிலே.
சோழதேசம் என்னத்தா தேடியல்லோ
வாரானே என்சாமி சேவகனும்"

சேவகர் சோழதேசம் வந்து, அரண்மனைக்கு சென்று அரசரை கண்டு நமஸ்காரம் செய்தார்கள்.

அரசர் 'சேவகா! மங்களம், உண்டாகட்டும்! என்ன விஷயமாக வந்தீர்கள்?

சேவகர். 'அரசே! பொன்னிவள நாட்டில், பெரிய வீட்டு அந்தகா இரண்டு நிலா குதிரை குட்டி ஆண், பெண், இரண்டும் வாங்கி வரும்படி பணம், 200. ரூபாய் கொடுத்து விட்டார்கள்!'

அரசர். 'சரி நல்லது! அடே, குதிரைப்பாகா! நிலாகுட்டி ஆண், பெண், இரண்டு பிடித்து வந்து கொடு.'

குதிரை பாகன். 'சாமி! நல்லது' என்று, இரண்டு குட்டிகளை பிடித்து வந்தான். சேவகர் 200 ரூபாயும் அரசரிடம் கொடுத்து விட்டு, நிலா குட்டிகளை பிடித்துக் கொண்டு அரசரிடம் விடை பெற்று புறப்பட்டு பொன்னிவளநாடு வந்து, தாமரையை கண்டு 'சாமி! நிலாக் குட்டி வாங்கி வந்து விட்டோம்' என்றான்.

தாமரை. 'சரி, நல்லது! ஆயிரமா நிலத்தில் கொண்டு போய் விட்டு விடுங்கள்.'

சேவகர் 'சாமி! நல்லது.

பாட்டு

"அந்தப் பிரகாரம் இனி
நடக்குதய்யா அதிகாரம்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குதய்யா நல் பருவம்"

இப்படியாக ஒருவருஷத்தில் நிலா இரண்டும் வளர்ந்து, கருமலைக்கெதிர் மலையாக நின்றது, ஆனால், பெண்ணுடன், ஆண் சேரவுமில்லை, குட்டியும் போடவில்லை.

தாமரை. 'நாதா! நிலாவும், என்னைப்போல் வரடாகி விட்டது, என்ன செய்வது. பன்றி பல குட்டிகள் போடும், என்று சொல்வார்கள், இரண்டு குட்டிகள் வாங்கி வந்து விட்டு வளர்த்தி அதையும் பார்ப்போம் நாதா!'

கு. ராஜன். 'பெண்ணேபன்றி, காட்டு மிருகம். வீட்டுக்கு ஆகாது.'

தாமரை: நாதா! அரண்மனைக்கு வேண்டாம், குறவனிடம் கொடுத்து வளர்த்துச் சொல்வோம்.

கு.சாமி: சரி, அப்படியே செய்!

தாமரை: அடே, பாரி வில்லசேவகா! இங்கு வா 10 ரூபாய் கொடுக்கிறேன், தங்க வளநாடு சென்று இரண்டு பன்றிக்குட்டி வாங்கி வந்து குறவனிடம் விட்டு வளர்த்துச் சொல்

சேவகர், பணத்தை வாங்கிக்கொண்டு தங்க வளநாடு போய் இரண்டு குட்டி வாங்கி வந்து குறவனிடம் விட்டு வந்தான்.

பாட்டு,,

"இந்தப் பிரகாரம் நடக்குது அதிகாரம்
மாதம் மூன்று மழை பெய்யும்
அங்கு வருஷமொரு கல்மாரி
திருப்பனிப் பெய்யும் நாட்டிலே
மிளகு சம்பா நெல் விளையும்
காலம் பனிப் பெய்யும் பொன்னி வள நாட்டில்
கருகு சம்பா நெல் விளையும்"

பன்றிகளும் வளர்ந்து கருமலையைப் போல நின்றது ஆனால் அதுவும் குட்டி போடவில்லை.

தாமரை: நாதா நம்மிடம் தண்ணீர் வாங்கி சாப்பிடும் எல்லாமே வறடாகி விட்டது என்ன செய்வது என்று.

கன்னி அழுகிறாள் காந்தாரி சோருகிறாள் மங்கை அழுகிறாள் மலர் கிளியா வாடுகிறாள்.